# CLASS - II

## TAMIL NOTES

## ( 2025 - 2026 )

# தமிழ்

## முதல் பருவத்தேர்வு பாடப்பகுதி

**பாடம் - 1**

**விளையாட்டு உலகம்**

**I.பிரித்து எழுதுக.**

1.பூங்கொத்து = பூ + கொத்து

2.நெய்தோசை = நெய் + தோசை

**II.வினா – விடை**

1.மீன் பிடிக்கச் சென்ற விலங்கு எது?

விடை: மீன் பிடிக்கச் சென்ற விலங்கு பூனை ஆகும்.

**பாடம் - 2**

**செய்து மகிழ்வோம்**

**I. விடுபட்ட எழுத்துகள்**

1. பூ ங் கா
2. ஊ ஞ் சல்
3. கு ப் பை த் தொ ட் டி
4. க ட ற் க ரை
5. கு டி நீ ர்

**II. வினா – விடை**

1. உணவை வீணாக்கக்கூடாது ஏன்?

விடை: உணவு நமது அடிப்படைத் தேவை. அதனால் உணவை வீணாக்கக் கூடாது.

**III. வாக்கியம் அமைத்தல்**

1. ஊஞ்சல்: எனக்கு ஊஞ்சல் ஆடப் பிடிக்கும்.

2. பூங்கா: மாலையில் பூங்காவிற்குச் செல்வேன்.

**பாடம் - 3**

**சொல்லாதே! சொல்லாதே!**

**I. சேர்த்து எழுதுக.**

1. ஆழம் + என்று =ஆழமென்று

2. நீலம் + வானம் = நீலவானம்

**II. எதிர்ச்சொல்**

1. அங்கும் x இங்கும்

2. மேலே x கீழே

3. சரி x தவறு

**III. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1.மீன் தண்ணீரில் வாழும்.

2.கடல் ஆழமாக இருக்கும்.

**பாடம் - 5**

**நண்பரைக் கண்டுபிடி**

**I. வினா – விடை**

1. உடலில் கருப்பு வெள்ளை வரிகளைக் கொண்ட விலங்கு எது?

 விடை: உடலில் கருப்பு, வெள்ளை வரிகளைக் கொண்ட விலங்கு வரிக்குதிரை.

2. புதிதாக வந்த நண்பர் யார்?

 விடை: புதிதாக வந்த நண்பர் ஒட்டகச்சிவிங்கி.

**பாடம் - 6**

**குமிழியின் பயணம்**

**I. எதிர்ச்சொல்**

1. சத்தம் x அமைதி
2. வந்தேன் x சென்றேன்
3. சிரிப்பு x அழுகை
4. மெதுவாக x வேகமாக

**II.வாக்கியம் அமைத்தல்.**

1. பயணம் : நான் பயணம் செய்தேன்.
2. தண்ணீர் : தண்ணீர் ஐம்பூதங்களில் ஒன்று.

**பாடம் - 7**

**என் கற்பனையில்**

**I. பிரித்து எழுதுக.**

1. பூனைக்குட்டி = பூனை + குட்டி
2. சறுக்குப்பலகை= சறுக்கு + பலகை

**II. வினா – விடை**

1. நேயன், நிலா இருவரும் என்ன வரைந்தார்கள்?

விடை: நேயன், நிலா இருவரும் வீடு வரைந்தார்கள்.

2. நேயன் வரைந்த வீட்டின் வண்ணம் என்ன?

விடை: நேயன் வரைந்த வீட்டின் வண்ணம் மஞ்சள்.

பாடம் - 8

இறகு

**I.ஒத்த ஓசையுடையவற்றை பொருத்துக.**

1. இந்த - அலையுதோ(3)
2. அழகுதான் - இறகிது (4)
3. போட்டதோ - எந்த (1)
4. எடுத்தது - இறகுதான்(2)

**II.வினா – விடை**

1. இறகு பாடலை எழுதியவர் யார்?

விடை: இறகு பாடலை எழுதியவர் அழ.வள்ளியப்பா


பாடம் - 10

ஆத்திசூடி

**I. மனப்பாடம்**

1. நன்மை கடைப்பிடி
2. நீர் விளையாடேல்
3. நூல் பல கல்
4. நேர்பட ஒழுகு
5. நோயினுக்கு இடம் கொடேல்.


**II. தமிழ்ச்சொல் அறிவோம்**

1. 

- நாள்காட்டி

2. 
- பழச்சாறு

3.  - பனிக்கூழ்

4.  - மதில்

**பாடம் - 12**

**அழகுத்தோட்டம்**

**I. வர்ணனைத் தொடர்கள்**

1. சிவந்த பழம்
2. வண்ண மயில்
3. வெள்ளை நிலா
4. கருப்பு நாய்க்குட்டி

**II. சேர்த்து எழுதுக.**

1. அழகு + தோட்டம் = அழகுத்தோட்டம்
2. இயற்கை + காட்சி = இயற்கைக்காட்சி
3. கன்று + குட்டி = கன்றுக்குட்டி

**பாடம் - 14**

**விட்டுச் செல்லாதே**

**I. சரியான விடையெழுது**

**(கரிக்கோல், அழிப்பான், துருவி, கயல்)**

1. தவறானால் அழிக்க உதவுவது அழிப்பான்
2. கரிக்கோலை கூர்மையாக்குவது துருவி
3. எழுத உதவுவது கரிக்கோல்
4. கரிக்கோலை விட்டுச்சென்றது கயல்

## இரண்டாம் பருவத் தேர்வுப் பாடப்பகுதி

**பாடம் - 15**

**ஓடி விளையாடு பாப்பா**

**பொருத்துக.**

1. கனிவு கொடுக்கும் - விளையாட்டு (3)
2. காலை - இல்லை (4)
3. மாலை – மேலோர் (5)
4. சாதிகள் - படிப்பு (2)
5. அன்பு நிறைய உடையோர் - பாட்டு(1)


**பாடம் - 16**


**ஆத்திசூடி**

**I.மனப்பாடம்**

1. பெரியாரைத் துணைகொள்.
2. இளமையில் கல்.
3. கேள்வி முயல்.
4. வைகறை துயில் எழு.
5. வித்தை விரும்பு.


**II.தமிழ்ச்சொல்**

 - வழலைக்கட்டி


 -பல்துலக்கி



-மட்டை



-பொத்தான்



-தோள்பை

**பாடம் - 18**

**யாரு! யாரு! யாரு!**

**I. பிரித்து எழுதுக.**

1. பருத்திச்செடி = பருத்தி + செடி
2. முத்துச்சிப்பி = முத்து + சிப்பி
3. கடலைக்கொட்டை = கடலை + கொட்டை

**II. வினா – விடை**

1. ஆலமரத்துக்கு அந்த ஊஞ்சலை ஆடக் கொடுத்தது யார்?

விடை: ஆலமரத்துக்கு அந்த ஊஞ்சலை ஆடக் கொடுத்தது இயற்கை அன்னை.

**பாடம்: 19**

**சிறிய உருவம்! பெரிய உலகம்!**

**I. சேர்த்து எழுதுக.**

1. கத்தி + கொண்டு= கத்திக்கொண்டு

2. எறும்பு + புற்று= எறும்புப்புற்று

3. தேன் + கூடு= தேன்கூடு

**II. வினா-விடை:**

1. கண்மணி எங்கெங்கே சென்றாள்?

விடை: கண்மணி எறும்புப்புற்று, தேன்கூடு போன்ற இடங்களுக்குச் சென்றாள்.

**பாடம் - 20**

**நாங்கள் நண்பர்கள்**

**I. பிரித்து எழுதுக.**

1. புதிர்க்கதை = புதிர் + கதை
2. பூச்செடிகள் = பூ + செடிகள்
3. பாட்டுப்போட்டி= பாட்டு + போட்டி

**II. வினா – விடை**

1. நாங்கள் நண்பர்கள் பாடத்திலுள்ள நண்பர்களின் பெயர்களை எழுதுக?

   விடை : ஆதி, தமிழினி, ஜெரின்.

**பாடம் - 22**

**அன்றும்… இன்றும்…**

**I. சேர்த்து எழுதுக:-**

1. ஊர் + தலைவர் = ஊர்த்தலைவர்
2. குளம் + கரை = குளக்கரை
3. அந்த + காலம் = அந்தக்காலம்

**II. எதிர்ச்சொல்:**

1. பின்னால் X முன்னால்
2. புதிய X பழைய
3. இழு X தள்ளு
4. பல X சில

**III.வினா – விடை**

1. அன்றும் இன்றும் பாடத்திலுள்ள பறவைகளின் பெயர்களை எழுதுக?

விடை : காகம், குருவி, கிளி, கொக்கு.

2. இயற்கைக்காட்சி பார்ப்பதற்கு எப்படி இருக்கும்?

விடை: இயற்கைக்காட்சி பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.

3. குளத்தைச் சரிசெய்யும்படி தாத்தா யாரிடம் கூறினார்?

விடை: குளத்தைச் சரிசெய்யும்படி தாத்தா ஊர்த்தலைவரிடம் கூறினார்.

**பாடம் - 23**

**விரும்பி வேலை செய்யலாம்**

**I.நிரப்புக.**

**(உடைகளை, பொருள்கள், தட்டைக்)**

1. உண்ணும் <u>தட்டைக்</u> கழுவலாம்.
2. கடையில் <u>பொருள்கள்</u> வாங்கலாம்.
3. உடுத்தும் <u>உடைகளை</u> மடிக்கலாம்.

**II.வினா – விடை**

1. நாம் எவ்வாறு வேலை செய்ய வேண்டும்?

விடை : நாம் ஏற்றத்தாழ்வு இன்றி வேலை செய்ய வேண்டும்.

**பாடம் - 24**

**கொன்றை வேந்தன்**

**மனப்பாடம்**

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
2. ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு.
3. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
4. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.
5. தீராக் கோபம் போராய் முடியும்.

-----------------------------------------*******************-------------------------------------